மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு தடவை விளக்கம் கேட்டார்கள். முதலமைச்சரிடத்தில் பேச இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) நேற்றைய தினம் ஒரு முடிவு செய்து, முதலமைச்சருடைய ஆலோசனைக்கிணங்கத் தொழிலாளர் நலச் செயலாளரும், ஆணையரும் இது சம்பந்தமாக இப்போது பேச இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

(ஈ) சுயநிதிக் கல்லூரிகள் அரசு நிர்ணயித்ததற்கு மேல் கட்டணம் வசூலிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுய நிதி பொறியியல் கல்லூரிகள் உச்ச நீதிமன்றம் நிர்ணயித்த தொகையை விடக் கூடுதலாகக் கட்டணத்தை வசூலித்து வருவதாக ஒரு பிரச்சினையை இன்று திரு. ஞானசேகரன் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்கம் பெற விரும்பியிருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடத்தப்படுகின்ற சுய நிதி பொறியியல் கல்லூரிகளில் தனியார், அரசு நிர்ணயித்து, சுப்ரீம் கோர்ட் ஒப்புதல் அளித்த தொகையைவிட பல மடங்கு கூடுதலாக நிர்வாகங்கள் இன்று வசூல் வேட்டையைத் தொடங்கியிருக்கிறது. கவர்ன்மெண்ட் கோட்டாவிற்கு ஆண்டிற்கு ரூ. 6,500 வசூல் செய்ய வேண்டிய நிர்வாகம், ரூ.10,0000, 15,000, 20,000 என்று வசூல் வேட்டையைத் தொடங்கியிருக்கிறார்கள். பேமென்ட் கோட்டாவிற்கு ரூ. 35,000 ஆண்டிற்கு வசூல் செய்ய வேண்டும். ஆனால், இவர்கள் பேமென்ட் கோட்டாவிற்கு, கவர்ன்மென்ட் பிக்ஸ் செய்வதற்குப் பதிலாக ஏதோ மேனேஜ்மென்ட் கோட்டா இருப்பது போலவே, இலட்சக்கணக்கிலே ரூபாய்களை மாணவர்களிடத்திலிருந்து பெற்று சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாம் இங்கே இந்த மாமன்றத்திலே இயற்றிய அந்த பிரிவென்ஷன் ஆப் கேபிடேஷன் பீ ஆக்ட்டும் சரி, அதே போல அரசு நிர்ணயித்திருக்கிற அந்தத் தொகையை எல்லாம்விட இவர்கள் அதிகமாக வசூல் வேட்டையில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், இன்று ஏழை எளிய மாணவர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு ஏற்கெனவே ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. எச்சரிக்கை மட்டும் போதாது. அதைப் பொறுத்தவரையில் அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, இதுபோன்ற நிர்வாகங்களை, உடனடியாக இதுபோன்ற வசூல் வேட்டை செய்வதிலிருந்து தடை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த கட்டணப் பிரிவில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடம் ஆண்டிற்கு ரூ. 6,500 மட்டும் வசூலிக்க வேண்டுமென்றும், அதிகக் கட்டணப் பிரிவில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடம் ஆண்டிற்கு ரூ. 32,000 மட்டும் இன்றைக்கு கல்விக் கட்டணமாக வசூலிக்க வேண்டுமென்றும், வேறு எந்தக் கட்டணமும் எந்த வகையிலேயும் வசூலிக்கக் கூடாது என்றும் தனியார் பயிலகங்களுக்கு அந்த நிர்வாகங்களுக்கு முன்பே அறிவுறுத்தப்பட்டுள்ளது. என்னும், குறைந்த கட்டணப் பிரிவில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடமிருந்து ரூ. 6,500க்குப் பதிலாக ரூ. 10,000 முதல் 12,000 வரை அதிகக் கட்டணத் தொகை கேட்டு, தனியார் பயிலக நிர்வாகங்கள் வற்புறுத்துவதாக பல பெற்றோர்கள் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு நேரடியாக வந்து, வாய் மொழியாகவும், எழுத்து வடிவிலும் புகார் செய்திருக்கிறார்கள். அப்படி 2 புகார்கள் இங்கே வந்திருக்கின்றன. இரண்டு கல்லூரிகளைப் பற்றி இது தொடர்பான அந்தப் புகார்களைப்பரிசீலித்து, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கடித எண். 108526/எச்.1/93-1, நாள் 22—10—1993இல் அனைத்து தனியார் சுய நிதி பொறியியல் கல்லூரி தலைவர்களுக்கும், தாளாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் அரசு நிர்ணயித்துள்ள பயிற்சிக் கட்டணத்தை விட தனியார் பயிலக நிர்வாகிகள் அதிக அளவில் வசூலிப்பதாகக் கூறப்படுவது பற்றியும், அவ்வாறு செய்யாமல் அரசு குறித்துள்ள கட்டண விகிதங்களை மட்டுமே வசூலிக்க வேண்டுமென்று பொதுவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதைப் போலவே புகார்களுக்கு உட்பட்ட இரண்டு கல்லூரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மேலும், முக்கிய ஆங்கிலம் மற்றும் தமிழ்ச் செய்தித்தாள்களில் இப்பொருள் குறித்து ஒரு செய்திக் குறிப்பு 27-10-93 அன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான உண்மை நிலையினை அறிந்து தமிழ்நாடு சட்டம் 57-92 '' கேப்பிடேஷன் ஃபீ அபாலிஷன் ஆக்ட்''—அதன்படி மேல் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்திந்திய தொழில் நுட்பப் பயிலகத்திற்கும்—ஏ.ஐ.சி.டி.ஈ. —இதுகுறித்து கடிதம் எழுதி ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கோரப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல எங்கெங்கு இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்று குறிப்பாகச் சுட்டிக்காட்டி புகார்கள் கொடுக்கப்படுமேயானால், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.